இதழ்-76

01.10.2024

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்தவை...

03 ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே
05 குழந்தைகள் உலகம் எப்போதும் அழகானது
08 புதினம் கேட்டியளோ...
09 தெல்லிநகர் தேவியின் வருடாந்த மகோற்சவம்
11 கின்னஸ் சாதனை படைத்த யாழ் மாணவி
12 ஈழத்தின் முதன்மைச் சித்தர் கடையிற் சுவாமிகள்
15 உலக சாதனை படைத்த மட்டக்களப்பு தமிழ்ச் சிறுமி
16 மனதை அறிந்து கொள்வோம்
22 மங்களமாக நடந்த மாயவனின் மகோற்சவம்
23 சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்
29 என் கால்கள் வழியே...
35 ஜஸ்பிரித் பும்ரா கடந்து வந்த கடினமான பாதை



**வாசகர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்**


# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு....! நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே......!




ஆதிகால மனிதர்கள் கூட்டம் கூட்டமாகவே குடிசைகள் அமைத்து வாழ்ந்து வந்தார்கள். கூட்டமாக வாழ்ந்து வருதல் அவர்களிற்கு பாதுகாப்பைத் தந்ததோடு, குழுவாக வேட்டையாடி அதன் மூலம் கிடைக்கின்ற உணவை பகிர்ந்துண்டு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். நாகரீகத்தில் மேம்பட்ட பின்னரும் கூட மனிதர்கள் கூட்டங்கூட்டமாக இணைந்து கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்தார்கள். “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்ற பழமொழிக்கேற்ப கூட்டாக விவசாயம் செய்து உணவை பகிர்ந்துண்டு பண்டமாற்று முறையில் பொருட்களை பரிமாறி ஒற்றுமையாக வாழ்ந்தார்கள்.

ஏனைய விலங்குகளால் ஆபத்து நேரும் போது ஒன்றாகத் திரண்டு அதனை எதிர்கொள்கின்றன. காடுகளில் வாழும் விலங்குகளான யானைகள், மான்கள், சிங்கங்கள் அனைத்துமே கூட்டாக வாழ்பவையே. ஒற்றுமைக்கு மிகச் சிறந்த உதாரணமாக விளங்கும் பறவையினம் காகம். காகங்கள் ஏதேனும் சிறு உணவைக் கண்டால் கூட, சத்தமாகக் கரைந்து தன் கூட்டத்தை அழைத்தே உண்ணும். மேலும் தேனீக்கள் ஒற்றுமைக்கு மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டு. தேனீக்கள் தனித்தனியாக தேனை சேகரித்த போதும், அதனை சேமித்து வைக்கும் வதையை சேர்ந்தே ஒற்றுமையாக அமைக்கின்றன. தமது வாழ்விடத்தை ஏதேனும் ஒரு ஆபத்து நெருங்கும் போது கூட்டாகச் சென்று தாக்குகின்றன. அத்துடன் எறும்புகள், கறையான் போன்றவையும் ஒன்றாகச் சேர்ந்து மண்ணைக் குடைந்து வாழ்விடத்தை அமைக்கின்றன. இவ்வாறு ஐந்தறிவு கொண்ட விலங்குகள் பறவைகள் கூட ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒற்றுமையாக வாழ்கின்றன. ஆனால் பகுத்தறிவும் நிரம்பிய மனிதர்களின் இன்றைய நிலை எமது சமூகத்தில் எவ்வாறு உள்ளது?

ஒரு குடும்பமாகட்டும், ஒரு ஆலய நிர்வாகம் ஆகட்டும், ஒரு சங்கமாகட்டும், ஒரு சபை ஆகட்டும், ஒரு அமைப்பு ஆகட்டும் அல்லது ஏதாவது ஒரு சிறிய மக்கள் கூட்டமாகட்டும் அங்கே ஆளுக்கு ஒரு வழியில் பயணித்து மற்றவர்






செயலில் தவறுகள் கண்டுபிடித்து சண்டை சச்சரவுகளில் ஈடுபடும் போக்கே அதிகமாக உள்ளது.

பண்டைய காலம்தொட்டு இன்று வரை புலவர்களும், அறிஞர்களும் ஒற்றுமையின் பலத்தை வலியுறுத்தி வந்துள்ளார்கள். முண்டாசுக் கவிஞனாகப் போற்றப்படும் பாரதியார், **"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே"** என்றார். அதாவது ஒற்றுமை இல்லையேல் அனைவரும் தாழ்ந்து விடுவர் என்று குறிப்பிடுகின்றார். அதுமட்டுமின்றி ஔவையார் தனது நூலாகிய கொன்றை வேந்தனில் **"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்"** என்கின்றார். அனைவருடனும் பகைமையை வளர்க்காது வாழ்வதே சிறந்ததாகும். ஏனெனில் ஊருடன் பகைமை பாராட்டினால், மன அமைதியுடன் வாழ இயலாது.

எனவே ஒரு கூட்டம் தான் ஒற்றுமையாக இல்லாமல் இன்னொரு கூட்டத்திடம் இருந்து எதனையுமே பெற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவைகள் ஒவ்வொரு விருப்பங்கள் இருந்தால் எல்லாருமே தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலில்தான் இயங்குவார்கள். கூட்டத்திற்காகவாவது ஒற்றுமையாகி தங்கள் சுய விருப்பு வெறுப்புக்களை மறந்து விட்டுக்கொடுப்புக்களுக்கு தயாராக வேண்டும். இதுவே முதற்படி. இது சாத்தியமாகாமல் எதுவுமே சாத்தியமாகாது.

**"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"** என்ற முன்னோர்களின் வாக்கிற்கமைய ஒற்றுமையே அனைவருக்கும் அவசியமானது. இயந்திரமயமான இந்த மனித வாழ்க்கை அழகாக மாற வேண்டுமாயின் நாம் அனைவரும் விட்டுக்கொடுப்புடன், ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழவேண்டும். அன்பின் வழியாக ஒற்றுமையுடன் ஒன்றாகி எண்ணியவற்றை அடைவதே எமக்கு இருக்கும் ஒரே வழி. சிந்தித்து செயற்படுவோம்.





# குழந்தைகள் உலகம் எப்போதும் அழகானது

எல்லோரது கண்களுற்கும் தெரிவது ஒரே உலகம்தான். ஆனால் எல்லாரது உலகமும் ஒன்றல்ல.. ஒருவன் கண்களில் உலகம் அற்புதமானது. இன்னொருவன் கண்களில் உலகம் ஆபத்தானது. பொல்லாதது உலகம் என்பான் ஒருவன். வெறும் பொய் உலகம் என்பான் இன்னொருவன்.

ஆனால் இந்த உலகம் அழகானது என்று சொல்கிற சில கண்கள் இருக்கிறதே, அவை யாருடைய கண்கள் தெரியுமா?

குழந்தைகளது கண்கள்.. ஆம்.. குழந்தைகளின் கண்களில் தான் உலகமும் தன்னை அழகானதாய் காண்கிறது. குழந்தைகளின் கண்களில் தெரிவன யாவும் அழகுதான். அலங்கோலம், அநாகரிகம் ஆபத்து ஆகிய வார்த்தைகள் குழந்தைகளிற்கு தெரியாது. அந்த வார்தைகளின் பின்னுள்ள வன்மங்களும் குழந்தைகளிற்கு தெரியாது.

நாம் கண்டும் அறியாதிருந்த, கவனிக்க தவறிய காட்சிகளை ஒரு குழந்தையின் கண்களினூடு காண்கிற போதுதான் வாழ்வின் அருமையையே பல நேரங்களில் உணரமுடிகிறது.

அட்டைப்படத்தை பாருங்கள்.. ஒரு பெண் குழந்தை.. யாருக்கோ அக்காவாகத்தான் இருக்கும். இந்த அக்காமார்களிற்குத் தான் இந்தப்பழக்கம் உண்டு..

பெரும்பாலும் குழந்தைப்பருவத்தில் சில அக்காமார்களை சந்தித்திருப்போம். அவர்கள் உடனே தான் வளர்ந்தும் இருப்போம். எப்போதும் அந்த அக்காமார்கள் செய்கிற காரியத்தையே கண் வெட்டாமல் ஆவலோடு பார்த்துக்

கொண்டிருப்போம். அந்த அக்காமார்களும் அப்படித்தான்- யாராவது குழந்தைகள் தன்னையே உற்றுகவனித்துத்திக் கொண்டிருப்பதை உணர்ந்தே கவனமாக நிதானமாக நளினமாக இரசனையுடன் அந்த காரியங்களை ஆற்றுவார்கள். குழந்தைப்பருவத்தில் இதை விட சிறந்த பொழுதுபோக்கு வேறு இருந்திருக்கிறதா நமக்கு.

மீண்டும் அப்படியொரு குழந்தை மனநிலையில் அந்த அட்டைப்படத்தைப் பாருங்கள்.

குப்பி விளக்கொளியில் கோபுரம் கட்டும் அந்த அக்காவைப் பாருங்கள்..! குப்பியின் அருமை நாட்டில் பட்டம் பெற்ற எல்லோருக்கும் தெரிந்திருக்கும். எத்தனை வர்ணங்களில் வகைகளில் விளக்குகளில் ஒளிர்ந்தாலும் ஒற்றை இரவின் குப்பி வெளிச்சம் போதும் உலகை வென்றிடலாம். அந்த வெளிச்சத்தில் கோபுரம் கட்டி அதன் உச்சத்தை உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் இந்தப் பெண் குழந்தையை நினைத்துப் பாருங்கள்.

ஒரு தேசத்தின் சொத்து களஞ்சியங்களில் இல்லை - அவை பள்ளிக்கூடங்களில் உள்ளது. குழந்தைகளே எம் முதல் சொத்து. உலகத்தில் மிகச்சிறந்த நாடு எதுவென்றால், சிறுவர்கள் மிகவும் பாதுகாப்போடு வளரக்கூடிய சூழலை எந்த ஒரு நாடு கொண்டிருக்கிறதோ அதுதான்.

எம் அரும்பெருஞ் சொத்தை பராமரிக்க தவறி வேகநடையில் ஓடும் எம் வாழ்வில் நாம் எதனை வென்று காட்டப்போகிறோம் என்பதுதான் விளங்கவில்லை.

சிறுவர்கள் தினமாய் வருகின்ற இன்றைய நாளில் நாம் எல்லோரும் கொள்ள வேண்டிய உறுதியில் இதுவே முதன்மைபெற வேண்டும்.

எம் அடுத்த தலைமுறையை - நாம் விட்டுச் செல்லும் அத்தனையையும் கொண்டு நடத்தப்போகும் இன்றைய சிறார்களை வழி நடத்தும் பணியில் நாம் எல்லோரும் இறங்க வேண்டும். என் குடும்பம் என் குழந்தை என்றல்ல. வீதியில், பேருந்தில், பள்ளியில் , ஆலயத்தில் எங்கெல்லாம் சிறார்களை காண்கிறோமே அவர்களின் எதிர்காலம் குறித்த பொறுப்பு நம்மிடமும் உள்ளதை



உணருங்கள். அவர்களை வழிநடத்துங்கள்..

பேருந்தில் ஏறும் கர்ப்பிணிப் பெண்ணிற்கு இடந்தர துணிவது பரிதாபத்தால் அல்ல. அது எம் அடுத்த தலைமுறையை சுமந்து வரும் பெண்ணிற்கு செய்கிற மரியாதை நிமித்தமே ஆகும்.

அடுத்த தலைமுறையை அனைவரும் பொறுப்பெடுத்து வழி நடத்த வேண்டியதன் கட்டாயத்தை உணருங்கள்.

எங்கோ ஒரு பிள்ளை தற்கொலை செய்து கொள்கிறது என்ற செய்தி கேட்டு உங்களால் நகரமுடிகிறதா? பரீட்சை பெறுபேறின்றியோ, அல்லது என்ன காரணத்திக்கோ ஒரு பிஞ்சுஉயிர் தன்னையே அழிக்க துணிகிறது என்றால் சொல்லுங்கள்.. அதற்கு நீங்கள் காரணமில்லையோ.. நீங்கள்- நான் எல்லோருமே காரணம்தான். நாம் இருக்கும் சூழலில் அப்படியொரு அவலம் நிகழாது என்று உறுதி எடுங்கள்.

மாறாக இறந்து விட்ட குழந்தைகள் பற்றி வாய்க்கு வந்த கதை அளக்காதீர்கள். பெற்றவர் உள்ளம் வேறு மற்றவர் உள்ளம் வேறு என்பதை உணர்ந்து பேசுங்கள். காலச்சக்கர சுழற்சியில் எதுவும் எங்கும் யார்வீட்டிலும் நிகழலாம். பொறுப்புள்ள தலைமுறையாய் எம் அடுத்த தலைமுறையை வழி நடத்தும் பணியில் இன்றே இறங்குகள்.

இதுவரை செய்து வந்தால் பெரிய நன்றி. செய்யவில்லை என்றால் இன்றே தொடங்குங்கள்.
“இந்தங்கால பிள்ளையள் சொன்னா எங்க கேக்குதுகள்?” இந்த பயனற்ற சோம்பல் வார்த்தைகளை இன்றோடு விடுங்கள். நீங்கள் சொன்னீர்களா? சொல்லிப்பாருங்கள் .. கேட்பார்கள்!

**“குழந்தைகளோடு சேர்ந்து விளையாடினால், அவர்களை எப்படியும் திருப்பலாம்”** என்பது ஒரு ஜெர்மனிய பழமொழி. முயற்சி செய்வோம். கடமை உணர்ந்து.

இனி இந்த உலகில் சிறுவர்களிற்கு துஷ்பிரயோகமோ, துர்மரணமோ என்று எந்த அவலமும் நிகழ கூடாது. சின்னஞ் சிறுவர்கள் தற்கொலை செய்து கொள்கிற செய்தி இனி செவிகளில் விழக்கூடாது.

தூய கண்களால் உலகம் அழகானது என்று நம்பிக்கையின் சுடரை அண்ணாந்து பார்க்கும் அந்தக் குழந்தையின் கண்களில் தெரியும் அழகை உண்மையாக்குங்கள். நிரந்தரமாக்குங்கள். உலகின் அழுக்குகள் எம் தலைமுறையோடு போகட்டும். நீங்கள் நாங்கள் என எல்லோரும் இருக்கும் இடத்தில் இனி குழந்தைகள் வளமாய் வளர்வார்கள் .
கிழவர்களும் குழந்தைகளும் இல்லாத வீட்டில் வேடிக்கையும் கலகலப்பும் இருக்கமாட்டாது. வீடுகள் யாவும் இன்ப மயமாய் இருக்க முதியோர் மற்றும் சிறுவர் தின வாழ்த்துகள்.

# புதினம் கேட்டியளோ...!


உங்க வீட்டு தீபாவளிப் பலகாரங்கள் நல்லா இருக்குன்னு சொன்னால், எல்லாம் கடவுள் செயல் எண்டு சொல்றியே....! ஏன்?
நான் என் கணவனை கடவுளாக மதிக்கிறேன்!
மணி 30/09/24

# பக்திபூர்வமாக நிகழ்ந்த தெல்லிநகர் தேவியின் வருடாந்த மகோற்சவ பெருவிழா






இலங்கையில் உருவான முதலாவது துர்க்கையம்மன் ஆலயமாக திகழ்கின்ற தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா ஆவணி ஓணத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு 04.09.2024 அன்று கொடியேற்றத்திருவிழாவுடன் ஆரம்பமானது. இவ்வருடம் பங்குனி உத்திரத்தில் பிரமாண்டமான முறையில் ஆலயம் மீள உருவாக்கப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றது. அதன் பின் நிகழும் முதலாவது மகோற்சவத்தில் பெருமளவு பக்தர்கள் கலந்து கெண்டு அம்பாளை மெய்யுருக வழிபட்டார்கள்.


















# காதல் தீவு ஹவாய்

உலகின் ரொமான்டிக் தலைநகராக நீண்ட காலம் முதலிடத்தில் இருந்த பாரீஸ், தற்போது 2வது இடத்திற்கு தள்ளப்பட்டது. அமெரிக்காவின் ஹவாய் தீவு முதலிடத்திற்கு வந்துவிட்டது. இந்த ஆய்வை, பன்ஜெத் சுற்றுலாத்துறை டாக்கர் அமைப்புடன் இணைந்து 2000 அமெரிக்க ஜோடிகளிடம் நடத்தியது. ஹவாய் தீவுகள், தம்பதியருக்கு மிகுந்த காதல் உணர்வுகளை எற்படுத்துவதாக பலரும் கூறுகின்றனர். அங்குள்ள ரிசார்ட்ஸ், கடற்கரைகள், மூங்கில் வனம், அழகான சூரிய அஸ்தமம் ஆகியவற்றால் பலரும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து முதலிடம் தந்துள்ளனர்.



# ரசிகர்களுக்கு கிடைத்த கௌரவம்

பிரேசிலை சேர்ந்த இந்த தாய்க்கு 11 வயதில் ஒரு மகன் இருக்கிறான் ஆனால் அவனுக்கு கண் பார்வை கிடையாது. கால்பந்து ரசிகரான தன் மகன் போட்டிகளை பார்க்க வேண்டும் என்று கூறும் போதெல்லாம் மகனை அழைத்து கொண்டு சர்வதேச போட்டிகள் நடக்கும் மைதானங்களுக்கு செல்வார் . போட்டி தொடங்கியதில் இருந்து முடியும் வரை அவர்கள் விளையாடுவதை மகனுக்கு சொல்லி கொண்டே இருப்பார் , இந்த காட்சிகள் மீடியாக்களில் வந்து வைரல் ஆகி உலக கால்பந்து சம்மேளமான குஜகுயு வின் கவனத்துக்கு சென்றது. இதை உறுதி செய்து கொண்ட உலக கால்பந்து அமைப்பு இது போல ஒரு கால்பந்து ரசிகையை நாங்கள் பார்த்ததில்லை என்று கூறி உயரிய விருதான உலகின் சிறந்த கால்பந்து ரசிகைக்கான விருதை இந்த தாய்க்கும் அவரது பார்வையற்ற மகனுக்கும் ஒருமுறை கொடுத்து கவுரவப்படுத்தி இருக்கிறது



# கின்னஸ் சாதனைப் படைத்த யாழ் மாணவி!


CERTIFICATE

The tallest stack of shoes in one minute (Under 16s) is 10, and was achieved by Mathanky Kanagasundaram (Sri Lanka), in Kodikamam, Sri Lanka, on 20 May 2024.

OFFICIALLY AMAZING

யாழ்ப்பாணம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த சாதாரண தரம் பயிலும் மாணவியான மாதங்கி கனகசுந்தரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். வேகமாக அதிக எண்ணிக்கையான பாதணிகளை அடுக்குதல் என்னும் தலைப்பின் கீழான போட்டியிலேயே இந்த சாதனையை படைத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக விண்ணப்பித்து 10 பாதணிகளை ஒன்றன் மேல் ஒன்றாக 59 செக்கன்களில் அடுக்கி குறித்த சாதனையை புரிந்துள்ளார். கடந்த மே மாதம் 20ஆம் திகதி கொடிகாமத்தில் உள்ள வீட்டில் இரு சாட்சிகள் முன்னிலையில் கின்னஸ் உலக சாதனை சட்டதிட்டங்களுக்கு அமைவாக குறித்த சாதனை நிகழ்வு காணொளியாக பதிவு செய்யப்பட்டு இணையத்தினுடாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.



மூன்று மாதங்களின் பின் world guiness assesment commity மூலம் இதன் உண்மைத்தன்மை ஆராயப்பட்டு 28.8.2024 அன்று நிகழ்வு கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்கப்பட்டு அதற்கான சான்றிதழ் குறித்த மாணவிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது

துர்கா, லட்சுமி, சரஸ்வதி எனும் அம்பிகையின் வடிவங்களை மனதில் இருத்தி வீரம், செல்வம், கல்வி எனும் பேறுகளை வேண்டி விரதமிருந்து வழிபடும் நவராத்திரி உற்சவம் வரும் 03.10.2024ம் திகதி தொடக்கம் 12.10.2024ம் திகதி வரை சிறப்பாக அம்பாள் ஆலயங்களில் நடைபெற்று இறுதி நாள் விஜயதசமி அன்று தாம் வேலை செய்யும் கருவிகளை வைத்து வேலைத்தளங்களில் வழிபாடு மேற்கொள்வதோடு ஆலயங்களில் வாழை வெட்டு நிகழ்வும் நடைபெறும்.



# ஈழத்தின் முதன்மைச் சித்தர் கடையிற் சுவாமிகள்



**கடையிற் சுவாமிகள் குருபூசை புரட்டாதி பூரட்டாதியில் வரும் 15.09.2024 அன்று அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

இந்த சித்தர்கள் யார்? வாழுங் காலத்தில் தன்னலமற்று வாழ்ந்தவர்கள். இனம், சாதி பேதங்கள் கடந்து உலகில் உள்ள மக்கள் பசிப்பிணி அற்று நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புகிறவர்கள். அவர்கள் இறைவழிபாட்டை எளிமையாக்கிக் காட்டியவர்கள் ஆடம்பரம், அலங்காரம் தேவையற்றது என்றவர்கள். எளிய வழியே ஏகனை காணும் வழி என்பதே அவர்களின் தத்துவம்.

தமிழகத்தில் வாழையடி வாழையாய் சித்தர்கள் மரபு தொடர்ந்து வந்ததைப் போல் ஈழத்திலும் சித்தர் மரபு இருந்தது. அந்த மரபை தொடங்கி வைத்தவர் கடையிற் சுவாமிகள். ஆனால் அவர் இலங்கையைச் சேர்ந்தவரில்லை. பெங்களூரிலே நீதித்துறையில் பணியாற்றி குருவிடம் தீட்சை பெற்று, அவர் ஆணைப்படி யாழ்.நகர் வந்து, யாழ்ப்பாணக் கடைவீதிகளில் கையில் குடையுடன் நடமாடி 'கடையிற் சுவாமிகள்' என போற்றப் பெற்றவர்.

கடையிற் சுவாமிகள் இலங்கையின் ஒரு சித்தராக கருதப்படுவதுடன், இலங்கையின் சித்தர் பரம்பரையின் ஆரம்பமாகவும் அறியப்படுகிறார். இவர் ஆதிகடைநாதன் என்ற பெயராலும் அறியப்படுகிறார். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த சித்தர்களில் இவர் முதலாமவராக குறிப்பிடப்படுகிறார்.

இவர் தென்னிந்தியாவின் பெங்களூரில் ஒரு நீதிபதியாக கடமை புரிந்து வந்தார். கொலை வழக்கு ஒன்றில் குற்றவாளி கொலையாளிதான் என்று தீர்ப்பாகியது. யூரிகளும் குற்றவாளியைக் கொலையாளியே என்று தீர்ப்பளித்துவிட்டனர்.

நீதிபதியாக இருந்த இவருள்ளே தூக்குத் தண்டனை கொடுப்பதற்கு நான் யார் என்ற தத்துவ விசாரணை எழுந்தது. இந்த மனக் குழப்பங்கள் காரணமாக நீதிபதித் தொழிலைக் கைவிட்டு குரு ஒருவரிடம் சென்று ஆன்மீக வாழ்க்கையை ஆரம்பித்தார். இவருடைய தீட்சைப் பெயர் முத்தியானந்தா என்பதாகும்.

வைரமுத்துச் செட்டியார் என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வணிகர் ஒருவரே முத்தியானந்தாவாக இருந்த கடையிற்சுவாமிகளை இலங்கைக்கு வருமாறு 1860ம் ஆண்டளவில் அழைத்ததுடன் அவர் இலங்கை வரவும் காரணமாக இருந்தார். கப்பல் ஒன்றின் மூலம் இலங்கையை வந்தடைந்த இவர் முதன்முதல் வந்திறங்கிய இடம் ஊர்காவற்றுறையாகும். அங்கிருந்து கால்நடையாக யாழ்ப்பாணம் நோக்கி வந்து மண்டை தீவில் குடியிருந்தார். யாழ்ப்பாணம் வந்த இச்சித்தர் தங்கியிருந்த இடம் பெரிய கடை ஆகும். இதன் காரணமாகவே கடையிற் சுவாமிகள் என்ற பெயர் இவருக்கு உருவானது.

சுவாமிகள் தனது உறைவிடமாக பெரியகடைச் சதுக்கத்தினை தெரிவு செய்தார். அது ஒரு பொதுச் சொத்து. அதின் மேற்கு, வடக்கு வீதிகளிலிருந்த வியாபார நிலையங்கள் பெரும்பாலும் வாணிபச் செட்டியார்களுக்குச் சொந்தமாயிருந்தன. அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் இயல்பாகவே, தெய்வ பக்தியிலும், அடியார் சேவையிலும், ஆர்வமுள்ளவர்கள். அவர்களில் சிலரே சுவாமிகளின் மகிமையை முதலில் அறிந்து கொண்டனர். முதன்முதலாக சுவாமிகள் வீடு தேடிச்சென்று உணவு கேட்டு அருந்தியது, திரு வைரமுத்துச் செட்டியார் மனையிலாகும். இவர் ஓர் பழைய தொண்டர். இவரின் குரு, பக்தியின் சின்னமாகப் பின்னாளில் தோன்றியதே கந்தர்மட அன்னசத்திரம்.

தம்மை நாடும் மெய்யடியாரிடையே சாதிபேதம், உயர்வுதாழ்வு, செல்வர் வறியர் என்ற வித்தியாசம் பாராது எல்லாருக்கும் ஒரேவித கருணைகாட்டி அவர்களது உடல்நோய்க்கும், மனநோய்க்கும், வறுமைக்கும், பரிகாரம் செய்வதில் அனுக்கிரகம் காட்டத் தொடங்கவே, சுவாமிகளிடம் அடியார் கூட்டம் பெருகியது. ஏழைகள் தங்கள் வீடுகளுக்கும் வருகை தருமாறு அழைப்பு விடுத்தனர். அவ்வாறு அங்கு செல்லும் போது, அவர்கள் தாம் வழமையாக உண்ணும் மாமிசங்களையும் உணவுகளையும் விருப்புடன் விருந்தாக அளித்தனர். விருப்பு வெறுப்பற்றவரான சுவாமிகள் அவற்றையும் ஏற்றார். இதனால் சைவ மக்கள் அதிருப்தி அடைந்தனர். இந்த சம்பவம் சார்ந்து யோகர் சுவாமிகள் கூறிய சம்பவம் ஒன்றை இங்கே பகிர்கிறோம்.

கடையிற் சுவாமிகளின் உத்தம சீடர்களுள் ஒருவரும், யோகரின் குருநாதருமான, நல்லூர் செல்லப்ப சுவாமிகளுக்கு தமது குருநாதன் மதுபானம் அருந்துகிறார் என்பதைப் பிறர் சொல்லக் கேட்டுச் சகிக்க

முடியவில்லையாம். அது அவரால் நம்ப முடியாத விஷயமாகவும் இருந்ததாம். நேரே பரிசோதிக்கக் கருதி ஒரு போத்தல் சாராயத்துடன் குருநாதரைத்தேடி பெரியகடை சென்றார். போத்தலைச் சால்வையில் சுற்றி மறைத்துக்கொண்டு அருகில் உட்கார்ந்ததும், ”ஓகோ! நீயும் எனக்குச் சாராய விருந்தளிக்க விரும்பிவிட்டாயா? சரி பின்னாலே மறைத்து வைத்திருக்கும் போத்தலை எடுத்துத் திற. நீயும் நானும் இங்கிருக்கும் அன்பர்களும் எல்லாரும் பகிர்ந்து குடிப்போம்”, என்றாராம். நடுக்கத்துடன் செல்லப்பா சுவாமிகள் போத்தலை முன்வைத்துத் திறந்ததுமே, திராவகம் முழுவதுமே ஆவியாக மாறிக் காற்றோடு கலந்துவிட்டதாம். சீடர் குருநாதரின் பாதங்களை இறுகப்பிடித்துக் கண்ணீரால் கழுவிவிட்டு நல்லூர்த் தேரடிக்குத் திரும்பிவிட்டாராம்.

இதுபோன்ற அற்புத நிகழ்ச்சிகள் நிறைய நடந்துள்ளன. அவரது ஊன் எச்சிலை உண்டு நோய் தீர்ந்தோர் பலர் சித்திகள் பெற்றோர் சிலருமுண்டு. சுதுமலையைச் சேர்ந்த ஒருவர் சோதிட வல்லுனரானார் இன்னொருவர் புகழ் பெற்ற வைத்தியரானார். மீன் பிடிக்கப் போயிருந்த கரையூர் வாசியான சுவாமிகளது அடியார் ஒருவர், நடுநிசியில் புயல்காற்றினாலும், பெருமழையினாலும் தாக்கப்பட்டு ஆழ்கடலில் அமிழ்ந்திப் போகும் வேளையில் வேறு தஞ்சமின்றி, கருணைமலையான சுவாமிகளைச் சிந்தித்து அலறவே, உடனே, அப்பக்தனது குடிசைக்குச் சென்று சவளக்கோல் ஒன்றை எடுத்து, ”ஏலேலோ”ப் பாடி முற்றத்து மண்ணைக் கிளறி, அந்தப் பக்தனின் உயிரை அவர் காப்பாற்றிய அருட் கதை கேட்போர் உளத்தை உருக்கும்.

இவ்விதம் முப்பது ஆண்டளவு யாழ்ப்பாண மக்களுக்கு அல்லல் களைந்து, அளப்பரும் அத்யாத்ம வழிகாட்டி, ஞானகுரு பரம்பரைக்கு வித்திட்ட இந்த மகானுபவர், கர வருடம், புரட்டாசி மாதத்தில் பூரணையும் பூரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய புண்ணிய வேளையில் மகாசமாதியடைந்தனர். சுவாமிகளுடைய சமாதிக் கோயில் வண்ணார்பண்ணை நீராவியடியில் உள்ளது.



# உலக சாதனை படைத்த மட்டக்களப்பு தமிழ்ச்சிறுமி







ஐந்து வயது பாடசாலை மாணவி தனது அசாதாரணமான மனக்கணிதத் தேர்வினால் கணிதத்தில் சர்வதேச கீர்த் தியைப் பெற்றுள்ளார். காவியஸ்ரீ 6 நிமிடம் 50 விநாடிகளில் 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளை தீர்த்தும் சோழன் உலக சாதனையைப் படைத்துள்ளார். மூன்று வரிகளை கொண்டு 50 கணக் குகள், நான்கு வரிகளை கொண்ட 50 கணக் குகள், 5 வரிகளை கொண்ட 50 கணக்குகள் மற்றும் 6 வரிகளை கொண்ட 50 கணக் குகள் இதில் கூட்டலும் மற்றும் கழித்தலும் கலந்து காணப்படும் மொத்தம் 200 கணக் குகளுக்கு அபகஸ் மற்றும் மனக்கணிதப் பயிற்சியின் ஊடாக எட்டு நிமிடங்களில் எழுத்தில் பதிலளிக்கவேண்டும் என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட உலக சாத னையின் இலக்கு.

ஆனால் சிறுமி காவியஸ்ரீ 8 நிமிடங்களில் முடிக்கவேண்டிய உலக சாதனையை 6 நிமிடங்கள் 50 விநாடிகளில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நீதிபதிகள் சோதித்த கணித கேள்விகளுக்கு சரியாக தீர்த்து உலக சாதனையை நிறுவினார். காவியஸ்ரீ மட்டக்களப்பு மாவட்டத்தில மைந்துள்ள ஈஸ்டன் இன்டர்நெஷனல் கல்லூரியில் முதல் வகுப்பு மாணவியாக கற்றுக்கொண்டிருக்கிறார்.

காவியஸ்ரீ 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தவர். இவரது தந்தை கணினி பொறியியலாளர் முருகேசன் பிள்ளை சுப்பிரமணியம், தாயார் மருத்துவர் ஹிசாந் தினி சுப்பிரமணியம் தம்பதிகளின் ஒரே புதல்வியாவார்.



# மனதை அறிந்து கொள்வோம்.

திவ்யபாலன் திவாகர்
யாழ்ப்பாண பல்கலைகழகம்

இழப்பு அல்லது பாதகமான சூழ்நிலை அல்லது மருந்துகள் காரணமாக துக்கம் வழமைக்கு மாறாக தொடர்ந்து காணப்படின் அதனை மனச்சோர்வு என்போம். சோர்வுற்ற மனநிலையில் ஒருவர் தொடர்ச்சியாக இருந்து அதன் காரணமாக உடல் உபாதைகள் ஏற்பட்டு அதனால் அவருடைய அன்றாட வேலைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அதுவே மனச்சோர்வு என DSM-V குறிப்பிடுகின்றது. அதைவிட இரண்டு வாரம் தொடக்கம் ஆறு மாதம் வரையான காலப்பகுதியில் மனச்சோர்வானது ஒருவரிடத்தில் காணப்படும் வாய்ப்புள்ளது. மனச்சோர்வானது நீண்ட காலம் காணப்படும் போது அது மனவடுவை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாக உள்ளத்தினுள் பல உபாதைகள் ஏற்படுகின்றது. இதனை தீவிரமான கொடிய நோய் என்று கூறலாம்.

வாழ்வில் ஒரு துன்பியல் நிகழ்வு குறுக்கிடும் போது மனச்சோர்வுக்கு ஆளாகின்றோம். மனிதனது இயைபாக்கத் திறனின் விளைவாக நாம் சில நாட்களுக்குள் அந்த மனச்சோர்விலிருந்து மீண்டு விடுகிறோம். மனச்சோர்வு ஒருவரை மீள முடியாத நிலைமைக்கு இட்டுச் செல்லுமாயின் அது ஒரு நோயியல் வெளிப்பாடாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

இத்தகைய மனச்சோர்வினால் 15:1 என்ற அடிப்படையில் வயது வந்தவர்கள் பாதிக்கப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகின்றது. மனச்சோர்வு பெரும்பாலும் 20 வயதுக்கு மேலே ஏற்படுவதாகவும் அதுமட்டுமின்றி உலக மக்கள் தொகையில் 16 வீதமானவர்கள் மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிந்து

கொள்ளமுடிகின்றது. மனச்சோர்வு என்பது பாரதூரமான உளநோயாகும். இன்று உலகில் அதிகரித்து வரும் உளநல பிரச்சினைகளில் முதன்நிலையில் இருப்பது மனச்சோர்வாகும். தன்னைத்தானே மாய்த்து கொள்வதற்கு 88 வீதம் காரணமாகவுள்ளது எனலாம்.

மனச்சோர்வு மனித சமுதாயத்தில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் துயரமான விடயம் என்னவெனில் அதை நாம் பெரிதாக பொருட்படுத்தாமல் விடுதலே இலகுவாகச் சிகிச்சையளிக்கக் கூடியதும், ஆரம்பத்திலேயே சிகிச்சை அளிப்பதால் அதிகளவில் குணப்படுத்தக் கூடியதுமான இந்த மனச்சோர்வு பற்றிய தெளிவான அறிவு எம்மில் பலரிடம் இல்லாதிருப்பது துரதிஸ்டமே.



சிலவேளைகளில் மனச்சோர்வினை எமது வாழ்வின் ஓர் அங்கமாக ஏற்றுக் கொள்ளும் அபாய நிலையும் உள்ளது. அத்துடன் கீழைத்தேய நாடுகளில் மனச்சோர்வு என்பது பெரும்பாலும் மெய்ப்பாட்டுக் குணங்குறிகளுடனே வெளிப்படுத்தப் படுகின்றது. அதாவது தலையிடி மற்றும் உடல் நோவுடன் எம்மவர் மனச்சோர்வினை வெளிப்படுத்து கின்றனர். பெண்கள் கண்ணீர் சிந்துதல் மூலமும் ஆண்கள் அதற்கு முற்றிலும் மாறாகத் தமது வேலைத் திறனில் வினைத்திறன் குறைந்து காணப்படுதல் மூலமும் வெளிப்படுத்துகின்றனர்.

எமது நாட்டில் தற்கொலைகள் அதிகமாகக் காணப்படுவதற்கும் வேலைத்தளங்களில் வினைத்திறன் குறைந்து காணப்படுவதற்கும் மனச்சோர்வு மிக முக்கிய காரணியாக அமைந்துள்ளது. உடல், உள, சமூக, ஆன்மீக தேவைகளை பெற்றுக்கொடுத்தும், தேவைகளை நிறைவேற்றி வைக்கின்றதும்இ பாதுகாப்பு வழங்குகின்றதுமான தலையாய கடமையும் பொறுப்பும் சமூகத்தில் ஒன்வொரு நபரிடமும் காணப்படுகிறது. இழப்பின் போது உணர்ச்சிகளை அடக்கி வைப்பதனால் மனச்சோர்வு ஏற்படுகிறது. வலி தரும் அனுபவங்களை பாதிக்கப்பட்டவர் வெளிப்படுத்தாது தனக்குள்ளேயே வைத்து துன்பப்படும் போதும்இ குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள்இ சமூக அடக்குமுறைகள் காரணமாகவும் தனித்து வாழக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்

போதும் மனக்குழப்பங்கள் ஏற்பட்டு மனச்சோர்வு ஏற்படும் தன்மை காணப்படுகிறது.

## உணர்ச்சி கட்டங்கள்

மனச்சோர்வின் உணர்ச்சி கட்டங்கள் பல்வேறு இயலாமைகளை வெளிப்படுத்துகின்றது.

1. இலகுவில் அழுதல்
2. தொடர்ச்சியாக யோசித்தபடி இருத்தல்
3. எதிர்காலத்தில் நம்பிக்கையற்று இருத்தல்
4. கவலையில் மூழ்கி இருத்தல்
5. தாழ்வு மனப்பான்மை

போன்ற கட்டங்களை கொண்டிருப்பர். மனச்சோர்விற்காக ICD - 10 இல் வழங்கப்பட்டுள்ள உணர்ச்சி கட்டங்களாக பின்வருவனவற்றை நாம் கூறமுடியும்.

1. பசியின்மை
2. நித்திரையின்மை
3. தன்னைத்தானே வருத்திக் கொள்ளல்
4. குறைந்த சுயமதிப்பு
5. குற்ற உணர்வு
6. எதிர்காலத்தைப் பற்றிய மறையான பார்வை
7. கவனச்சிதறல்
8. உடல் சோர்வு
9. கவலை
10. எதிலும் ஆர்வம் இன்மை



போன்றவற்றினை நாம் கூற முடியும்.

## மிகை குற்ற உணர்வு

சாதாரணமாக நாம் தவறு செய்யும் பொழுது குற்ற உணர்விற்கு உள்ளாகின்றோம். அது மனித வாழ்வில் சாதாரண விடயம். ஆனால் ஒரு அற்பமான விடயத்திற்கு ஒருவர் மிகையாகக் குற்ற உணர்வு கொண்டு அதுவே தொடர்ந்து அவரது நினைவினை ஆக்கிரமிக்குமாயின் அதை மனச்சோர்வின் ஒரு குணங்குறியாகக் கொள்ளல் வேண்டும்.

## தற்கொலை எண்ணம்

அடிக்கடி ஒருவர் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என எண்ணுவதும் அதற்காக அவர் திட்டமிடுவதும் ஒரு சாதாரண விடயமல்ல. அது அவர் மனச்சோர்வின் பாதிப்பிற்குள் மூழ்கியிருப்பதன் ஒரு வெளிப்பாடாக அமைதல் கூடும். ஆகவே ஒருவர் தற்கொலை எண்ணங்களை வெளிப்படுத்துவராயின் அது புறக்கணிக்கக்கூடிய ஒரு விடயமல்ல. அவ்வெளிப்பாட்டினைப் புரிந்து கொண்டு அதற்குரிய ஆற்றுகைச் செயற்பாட்டில் ஈடுபடுதல் அவசியமாகும். கணிசமான தற்கொலையாளர்கள் தாம் அதைச் செய்வதற்கு முன் யாரிடமாவது அவற்றை வெளிப்படுத்துகிறார்கள். எனவே அதனை நாம் ஒரு

அபாய அறிவிப்பாகக் கொள்ள வேண்டும். சிலவேளைகளில் அன்புக்குரியவர்களின் மற்றும் உறவினர் களின் மனதைக் காயப்படுத்தவும், அவர்களை உளவியல் ரீதியாகத் துன்புறுத்தவும் சிலர் தற்கொலை எண்ணத்தை வெளிப்படுத்துவது உண்டு.

## கண்ணீர் சிந்துதல்

ஒருவர் சிறு சிறு விடயங்களுக்கும் கண்ணீர் சிந்துபவராயின் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும். அதுவும் நித்தமும் தன்னுடைய துன்பங்களுக்குக் கண்ணீர் சிந்துதல் என்பது மனச்சோர்வினால் பாதிக்கப் பட்டவர்கள் வெளிப்படுத்தும் ஒரு உணர்ச்சி. இதனை ஒரு மனச்சோர்வின் ஆரம்ப அறிகுறியாகக் கொள்ளலாம். குடும்ப அங்கத்தவர்களிடம் திடீரென அழுவதன் மூலம் தம்மை அவர்கள் இனங் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் மனச்சோர்வு முற்றிய நிலையில் அவர்கள் தமது துன்பத்தை அழுது வெளிப்படுத்த முடியாத கையாலாகாத நிலையில் காணப்படுவர்.

## தன்னலத்துறவு

தன்னுடைய தேவைகளை ஒருவர் புறக்கணித்து ஆர்வமின்மையுடன் காணப்படுவராயின் அவர் மனச்சோர்விற்கு உட்பட்டவராக இருக்கலாம். தனது உடை, தனது முகபாவங்கள், தனது உடல் தூய்மை போன்ற தன்னுடைய எல்லாத் தேவைகளிலும் ஒருவர் ஆர்வம் காட்டாமல் இருப்பராயின் நாம் அவற்றை அவதானிக்கத் தவறக் கூடாது. அத்துடன் அவரது முகத்தில் சோகம் மற்றும் உணர்ச்சிகளை வெளிக்காட்டாத முகபாவம் காணப்படுமாயின் அவர் மனச்சோர்வுக்கு உள்ளானவராக இருக்கலாம்.

## உணவில் ஆர்வமின்மை

நாளாந்தம் நாம் ரசனையோடு செய்யும் காரியம் உணவு உட்கொள்ளல் ஒருவர் தன்னுடைய உணவில் ஆர்வம் கொள்ளாதவராக ஏனோதானோ என உணவு உட்கொள்வாராயின் அல்லது உட்கொள்ளும் உணவின் அளவு குறைந்து காணப்படுமாயின் அதை ஒரு மிக முக்கியமான மனச்சோர்வுக் குணங்குறியாகக் கொள்ளலாம்.

## நித்திரையின்மை

மனச்சோர்விற்கு உட்பட்ட ஒருவருக்கு நித்திரைக் குழப்பம் ஏற்படுவது சகஜமே. சில சமயம் அவர் படுத்துத் தூங்க விரும்பும்போது அது கை கூடாமற் போகலாம். அல்லது மிக அதிகாலையில் விழித்திருந்து நித்திரைக்காகக் கட்டிலில் புரள்வதாகவும் அமையலாம். மனச்சோர்வின் ஆரம்பத்தில் முதலில் குறிப்பிட்டவாறும், மனச் சோர்வு தீவிரமாகும் போது பின்னர் குறிப்பிட்ட வகையிலும் நித்திரையின்மை




ஏற்படலாம். அதைவிட இடைக்கிடை ஏற்படும் நித்திரைக் குழப்பத்துடன் பலவிதமான எதிர்மறையான சிந்தனைகள் ஏற்படுவதாகவும் அமையலாம்.

மனதை ஒருமுகப்படுத்த முடியாமை
தனது அன்றாட வாழ்வில் மனதை ஒருமுகப்படுத்த முடியாமல் ஒருவர் தொடர்ந்து தவிப்பாராயின் அவர் மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம். வாசிப்பதில், கணக்குப் பார்த்தலில் மற்றும் சாதாரண கடமையில் மனதை ஒருமுகப்படுத்த முடியாமல் ஒருவர் அவதிப்படுவதை நாம் சாதாரணமாகக் கொள்ள முடியாது. இதுவே அவரது அன்றாட கடமைகளை மோசமாகப் பாதிப்பதாக அமைந்து சிகிச்சை பெற வேண்டிய நிலைமையைத் தோற்றுவிக்கலாம்.

## நம்பிக்கையின்மை

ஒருவர் அதிகம் நம்பிக்கையற்றவராக, அதுவும் எதிர்கால வாழ்வில் நம்பிக்கையற்றவராகக் காணப் படுவாராயின் அதை ஒரு குறிப்பிடத்தக்க அலட்சியப்படுத்த முடியாத விடயமாகக் கொள்ளலாம். எமது வாழ்க்கைச் சக்கரம் சுழலுவதற்கு அடிப்படையானது நம்பிக்கையே ஆகும். அந்த அடிநாதமான நம்பிக்கையை ஒருவர் தொலைப்பாராயின் அது அவரது வாழ்வினை முற்றாகத் தொலைப்பதற்கு ஒத்ததாக அமைகிறது. நம்பிக்கையீனமும் தற்கொலை எண்ணமும் ஒருவரிடம் அதிகமாகக் காணப்படுமாயின் நாம் மிக அவதானமாக இருத்தல் வேண்டும். சில வேளைகளில் இது தன்நம்பிக்கை இழப்பதாகவும் அமையக்கூடும்.



மனச்சோர்வினால் அவதிப்படும் ஒருவரிடம் மேற்கூறிய எல்லா விதமான குணங்குறிகளும் காணப்படுதல் அவசியமில்லை. சில குணங்குறிகள் மாத்திரம் காணப்படுமென்றாலும் அது மனச்சோர்வின் அடையாளம் ஆகும். மனச்சோர்வின் தீவிரத் தன்மையைப் பொறுத்துக் குணங்குறிகளின் அளவும் பரிமாணமும் அமையும்.

மேலும் மனச்சோர்விற்கான உணர்ச்சிக்கட்டங்கள் எனும் போது

1. Low mood and irritability
இவருடைய மனம் மற்றும் மனதில் நினைக்கின்ற செயற்பாடுகள் இவருடைய சந்தோசங்கள் அனைத்தும் தாழ்ந்த நிலையில் காணப்படும்.

2. Loss of enjoyment and hobbies
இவருடைய பொழுதுபோக்குகள் அல்லது ஏனைய விடயங்கள் எதனையும் சந்தோசமாக அனுபவிக்க மாட்டார்.

### 3. Appetite

உடலில் ஹோர்மோன்களில் மாற்றம் ஏற்படுவதன் காரணமாக பசியின்மை அதிகரித்து காணப்படும்.

### 4. Sleeping difficulties

தூக்கமினஎம்ம, ஆர்வக் குறைவு, வாழ்க்கையில் விருப்பமின்மை போன்றவையும் காணப்படும்.

### 5. Self distructive bechavoiur and sucide thoughts

தன்னை அழித்துக் கொள்ளக்கூடிய எண்ணம் மற்றும் தற்கொலை எண்ணம் என்பனவும் காணப்படுகின்றது.

அதுமட்டுமின்றி பொதுவான உணர்ச்சி கட்டங்களாக உடலளவில் மிகச் சோர்வாக காணப்படுதல், உடல் எடை கூடுதல் அல்லது குறைதல், அடிக்கடி பெருமூச்சு விடுதல், எப்பொழுதும் பிரமை பிடித்தவர் போல இருத்தல், மனதில் குழப்பத்துடன் இருத்தல், கவனமின்மை அல்லது கவனச்சிதறல், அதிகமான கவலை, எதிலும் நாட்டமின்மை, உடல் சார்ந்த பலவீனம், நடத்தையில் மாறுதல்கள் காணப்படும், அதீத கற்பனை, எதை செய்வது என்ற எண்ணம் மனதில் ஓடிய வண்ணம் இருக்கும், சுய பராமரிப்பு இன்மை, அதிக அளவில் அல்லது குறைவாக உண்ணுதல், வேகமாக அல்லது மெதுவாக நடத்தல், அளவுக்கு அதிகமான கோபம், மனவெழுச்சிகளுக்கு ஆட்பட்டு காணப்படல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

## பறக்கும் கப்பல் சேவை இலங்கையில் ஆரம்பமாகவுள்ளது



இலங்கை முதன் முறையாக பறக்கும் கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளது. இச் சேவையை முன்னெடுக்கும் நிறுவனத்திற்கும் கிழக்கு மாகாண சபைக்கும் இடையில் உடன்படிக்கை கைச்சாத்தானது. தெற்காசியாவில் முதன் முறையாக இலங்கையில் யுசை-ளுாணி சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தம் சர்வதேச யுசை ளுியஉந நிறுவனத்தின் தலைவர் ˮகரேவ் செர்ஜி நிகோலாவிச்க்கும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்திற்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

திருகோணமலையில் நிலா வெளியிலும் மட்டக்களப்பில் பாசிக்குடாவிலும் அம்பாறையில் அருகம்பேயிலும் இவ்வகை பறக்கும் கப்பல் சேவை ஜனவரி முதல் ஆரம்பமாகவுள்ளது..




# மங்களமாக நடந்த மாயவனின் மகோற்சவம்





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் திருக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் கடந்த 02.09.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக நடைபெற்றது. பெருமளவு பக்தர்கள் ஈழத்திருநாட்டின் நான்கு திசையிலும் இருந்து வருகை தந்து கோவிந்தனின் கோல அழகைக் கண்டு மெய்யுருக வழிபட்டார்கள்.











# சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம்

கனிஸ்ரா ஜெயகாந்தன்
ஊடகக்கற்கைகள்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஸ்ரிக்கப்படுகின்றது. சிறுவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக சர்வதேச சிறுவர் தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. 1954ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஆலோசனைக்கமைய உலக சிறுவர் தினத்தைக் கொண்டாடும் நிகழ்வு ஆரம்பமானது. சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு மிகவும் சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 1989 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கமைய ஐ.நா சிறுவர் உரிமைகள் சாசனம் 18 வயதிற்கு உட்பட்ட அனைத்துப் பிரஜைகளும் சிறுவர்கள் என்று கூறுகிறது. 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய, 1991 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச முதியோர் தினமும் குறித்த நாளில் இணைத்து கொண்டாடப்படுகின்றுது. உலக நாடுகளில் இடம்பெற்ற

யுத்தங்கள், கலவரங்கள், இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றில் அதிகமாக பாதிப்புக்குள்ளாரவர்களில் சிறுவர்களும், முதியவர்களும் உள்ளடங்குகின்றனர். எனவே தான் ஒவ்வொரு நாடுகளும் சிறுவர்களினதும், முதியவர்களினதும் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற அடிப்படையில் இந்த தினத்தினை கொண்டாடுகின்றனர்.

இதேவேளை, உலக அளவில் சிறுவர்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் உலகிலுள்ள சிறுவர்களில் 16 ஆயிரம் பேர் மரணிக்கின்றனர். 10 வயதிற்கும் 19 வயதிற்கும் இடைப்பட்ட 2 மில்லியன் பேர்வரையில் எச்.ஐ.வி (HIV) தொற்றுக்கு உள்ளாவதுடன், அவர்களில் 56 % சிறுமிகளாக உள்ளனர். ஒவ்வொரு 10 நிமிடத்திற்கும் ஒரு பெண் குழந்தை காரணமின்றி அல்லது வன்முறையினால் உயிரிழக்கின்றது. உலகம் முழுவதிலும் மரணிக்கின்ற ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 50% போசாக்கின்மையால் மரணிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.



சிறுவர்களுக்கு எதிராக மேற்க்கொள்ளப்படும் பொருளாதார சுரண்டல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் உரிமை, பாலியல் வல்லுறவுகளில் இருந்து பாதுகாக்கும் உரிமை, சித்திரவதைகள் போன்ற தண்டனைகளில் இருந்து தம்மை தவிர்த்துக் கொள்ளும் உரிமை மற்றும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்குமான உரிமைகள் அனைத்து சிறுவர்களுக்கு உரித்தானவையாகும்.

இன்றைய காலத்தில் சிறுவர் மீதான துஸ்பிரயோகம் என்ற விடயமானது ஒட்டுமொத்த உலகையும் உலுக்கிக் கொண்டிருக்கும் பேராபத்தான விடயமாக பார்க்கப்படுகின்றது. சிறுவர் துஸ்பிரயோகம் என்பது சிறுவர்களை தவறாக வழிநடத்தும் அனைத்துவித தவறுகளையும் உள்ளடக்குகின்றது. சமூக கட்டமைப்புகள் அடிப்படையில் ஆண் பிள்ளைகளானாலும், பெண் பிள்ளைகளானாலும் எந்தவொரு வயது வேறுபாடுகள் இன்றி தினம் தினம் சிறுவர்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள் நடந்தேறிய வண்ணமுள்ளன. விபரமறியாத சிறுவர் - சிறுமியரை வயதில் மூத்தவர்கள் தமது பாலியல் வக்கிரங்களுக்கு இரையாக்கும் சம்பவங்கள்

தொடர்கின்றன. உலகம் முழுவதிலும் இடம்பெறுகின்ற வன்முறைகள், மற்றும் பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்கள் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மறுபுறத்தில் போட்டித்தன்மை வாய்ந்த கல்வியின் பிடியில் குழந்தைப் பருவம் சிக்கியுள்ளதுடன், இன்னொருபுறத்தில், நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், ஆபாச மற்றும் கொடூர காட்சிகளைக் கொண்ட சினிமா, போதை மற்றும் புகைத்தல், ஏனைய சமூகக் காரணிகள் காரணமாக சிறுவர்கள் பல்வேறு பாதிப்புகளையும் சவால்களையும் எதிர்நோக்குகின்றனர்.

எமது நாட்டை பொறுத்த வரையில் பொருளாதார சிக்கல் நிலைமை காரணமாக சிறுவர்களை வேலைக்கமர்த்துதல், அவர்களின் கல்வியினை தடைசெய்தல், வீட்டுவேலைக்கமர்த்தல், பாலியல் திருமணம் (சிறுவர் திருமணம்) போன்ற சிறுவர் உரிமைகளை மீறும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நிகழ்கின்றன.

இலங்கையில் புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டில் சிறுவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் , 5 முதல் 17 வயது வரை 45 இலட்சத்து 71 ஆயிரத்து 442 சிறுவர்கள் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களுள், 41 இலட்சத்து 18 ஆயிரத்து 781 சிறுவர்கள் பாடசலைக்கு செல்கின்றதாகவும், ஏனைய 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 பேர் பாடசாலைக்கு செல்வதில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள சிறுவர்களின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 9.9 சதவீதமாக இது பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 704 சிறுவர்கள் வேலை செய்பவர்களாக உள்ளாகவும், அவர்களுள், 59 ஆயிரத்து 990 சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றபோதும், சிறுவர் தொழிலாளர்களாக அவர்கள் வகைப்படுத்தப்படவில்லை. எஞ்சியுள்ள 43 ஆயிரத்து 714 சிறுவர்கள், சிறுவர் தொழிலாளர்களாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. குறித்த சிறுவர் தொழிலாளர்களுள், 4 ஆயிரத்து 707 பேர் மட்டுமே அபாயகரமற்ற தொழிலில் ஈடுபவதாகவும், ஏனைய 39 ஆயிரத்து ஏழு சிறுவர்கள் அபாயகரமான தொழிலில் ஈடுபடுவதாகவும்



புள்ளிவிபரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களின் செயற்பாடுகளின் அடிப்படையிலான வகைப் படுத்தல்களின்படி, 10 இலட்சத்து 85 ஆயிரத்து 908 சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லும் செயற்பாட்டில் மட்டும் ஈடுபட்டுள்ளனர்.3 இலட்சத்து 17 ஆயிரத்து 158 சிறுவர்கள் வீட்டுப் பராமரிப்பு பணிகளில் மட்டும் ஈடுபடுகின்றனர். 6 ஆயிரத்து 580 சிறுவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடுகின்றனர்.

29 இலட்சத்து 92 ஆயிரத்து 582 சிறுவர்கள், பாடசாலைக்கு செல்வதுடன், வீட்டு பராமரிப்பு பணிகளில் ஈடுபடுகின்றனர்.38 ஆயிரத்து 111 சிறுவர்கள் பாடசாலைக்கு சென்றுகொண்டு, வீட்டு பராமரிப்பு பணிகளில் ஈடுபடுவதுடன், பொருளாதார நடவடிக்கைகளிரும் ஈடுபடுகின்றனர். 56 ஆயிரத்து 834 சிறுவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், வீட்டுப் பராமரிப்பு பணிகளிலும் ஈடுபடுகின்றனர்.2 ஆயிரத்து 179 சிறுவர்கள் பாடசாலைக்கு சென்றுகொண்டு பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுகின்றதாக புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை வேலைக்கமர்த்தும் அநேகமான சந்தர்ப்பங்களில் அவர்களது உரிமைகளும் மறுக்கப்படுகின்றமை வேதனைக் குரியது மட்டுமல்லாமல், அது தண்டனைக்குரிய பாரிய குற்றமாகவும் கருதப்படுகின்றது. அதேவேளை, சிறுவர்களுக்கெதிரான கொடூரமான தண்டனைகள் அவர்கள் மத்தியில் உள ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன்,இப் பாதிப்புக்கள் அவர்களது இளமைப் பருவத்திலும் அதிகளவு தாக்கம் செலுத்துவதாக ஆய்வு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் 60 கோடி முதியவர்கள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது, உலக மக்கள்தொகையில் 10ல் ஒருவர் 60வயதுக்கு மேற்பட்டவராக இருக்கிறார். இது, 2050ல் ஐந்தில் ஒருவராகவும், 2150ல் 3/1 இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் உலகில் 1200 கோடி மக்கள் வயோதிபர்களாக இருப்பார்கள் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இலங்கையில் முதியோர்களின்



எண்ணிக்கை 2030ஆம் ஆண்டளவில் 22% அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் சுமார் 22 இலட்சம் முதியோர் உள்ளனர். மொத்த சனத்தொகையில் இது 13 சதவீதமாகும்.

முதியவர்களை அவர்களின் இயலாமையின் போது சரியாக கவனிக்காமை, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்காமை, உரிய வகையில் - உரிய நேரத்திற்கு உணவளிக்காமை, அவர்களை தனிமைப்படுத்தி வைத்திருத்தல், அவர்களின் கருத்துக்களுக்கு செவிகொடுக்காமை, துன்புறுத்தல், வார்த்தைகளால் காயப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் மிகவும் பாதிக்கின்ற விடயங்களாக அமைகின்றன.

நாம் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களுடன் செலவிடும் நேரத்தினை குறைத்து - சிறிய நேரத்தையாவது ஒதுக்கி முதியவர்களுடன் உறவாடுவதில் செலவிடுவோமாக இருந்தால் அவை அவர்களுக்கு ஆறுதலாக இருப்பதுடக் மாத்திரம் அல்லாது, அவை எமது எதிர்கால வாழ்க்கைக்கு உதவியாகவும் அமையும்.

“காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்” என்ற பழமொழியைப்போல நாம் எம்முடைய வீட்டில் வசதிக்கும் முதியோரை எவ்வாறு நடத்துகின்றோமோ, அதனை பார்த்து பின்பற்றி எம்முடைய பிள்ளைகளும் எம் நடாத்துவார்கள் என்பதை மனதில் இருந்தி செயற்படுவோம். உலகளவில் சிறுவர்களின், முதியவர்களின் உரிமைகள் மீறப்படும் போது அவர்களால் தங்களை வெளிப்படுத்த முடிவதில்லை. நலிவுற்றவர்களாக மற்றும் தீங்கு விளைவிக்கப்படும் அல்லது சுரண்டப்படும் அபாயத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் முதியோர்களை மீட்க வேண்டியது தேவை எம் அனைவருக்கும் உள்ளது.

சிறுவர்களை கட்டாய வேலைக்கமர்த்தல், உடல், பாலியல் மற்றும் உள - உணர்ச்சி ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாக்குவோருக்கு எதிராக அதிகார பதவிகளில் இருப்பவர்கள், பெற்றோர், ஆசிரியர், மதத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், ஊடகவியலாளர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

அதேசமயம் முதியோர் விடயத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு, உணவு, உறைவிடம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூகம் மற்றும் சட்டரீதியான பாதுகாப்பளித்தல், மனித உரிமைகள்



மற்றும் அடிப்படை சுதந்திரத்தை முதியோர் அனுபவிக்க வழிவகை செய்தல் போன்ற முதியோர் நலன்கள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்படுவதும் அவசியமாகின்றது. வேறுபட்ட சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் மத்தியில் ஆதரவற்றவர்களாக மாறும் வயதான முதியோரைக் கவனித்துப் பராமரிப்பதற்கு மனிதாபி மானரீதியில் பங்களிக்க வேண்டும் என்பதுடன், சர்வதேச ரீதியான முதியோர் பராமரிப்புச் சேவையிலிருந்து அறிவு மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு அதற்கு விரிவான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதும் அத்தியாவ சியமானதாகும்.

சிறுவர்களின் எதிர்காலத்தை வளம்மிக்கதாக ஒளி பெறச்செய்வதும், முதியோர்களை பாதுகாப்பதும் சமூகத்தின் ஒவ்வொரு பிரஜைகளினதும் பொறுப்பு என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். உலக சிறுவர் முதியோர் தினத்தைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் சிறுவர் உலகினைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும், வயதான முதியோருக்குக் கிடைக்க வேண்டிய அன்பு, கண்ணியம், அவதானத்தினை வழங்கவும் தம்மால் இயன்ற திடசங்கற்ப்பத்தினை ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களும் மேற்கொள்வார்களாக இருந்தால் அதுவே இந்த சிறுவர் மற்றும் முதியோர் தினத்தின் வெற்றியாக அமையும்.

## பட்டாம்பூச்சிகளின் இரட்சகன்

பாகிஸ்தானில் அழிவின் விளிம்பில் உள்ள பட்டாம்பூச்சிகளை வளர்த்து வருகிறார் இயற்கை ஆர்வலரான ஷிரீன். கடந்த 20 வருடங்களாக இதைச் செய்து வருவதாக அவர் கூறுகிறார். 2016 இல் ஒரு பட்டாம்பூச்சிகளுக்கான ஒரு கழகத்தை முன்னெடுத்தார் ஷிரீன்.

இந்த கழகத்திற்கு கராச்சியில் உள்ள பள்ளிகளின் மாணவர்கள் அடிக்கடி வருகிறார்கள். “இதனால் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு, புரிதல் அவர்களுக்கு ஏற்படும். அது எதிர்கால தலைமுறையினருக்கு மிகவும் முக்கியம். சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விஷயங்களை இவர்கள் இங்கு கற்றுக்கொள்கிறார்கள்.” என்கிறார் அவர்.



ஐ.வி.மகாசேனன்




# என் காலக்ள் வழியே...

## டெல்லியில் ஆரம்ப நாட்கள்!

இக்காலம் டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அனுபவங்களை பதிவதும், பகிர்வதும் பொருத்தமாக இருக்கும். இலங்கையும் ஜனாதிபதி தேர்தலில் புதியதொரு மாற்றத்திற்குள் பயணித்துள்ளதும் இம்மாற்றத்தில் இளைஞர்களின் பங்கும் அதிகளவு அவதானிக்கப்படுகின்றது. அதன் பின்னால் தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களில் ஆதிக்கம் செலுத்தும் ஜே.வி.பி இளம் செயற்பாட்டாளர்களின் தாக்கம் முதன்மையானதாகும். இலங்கை பல்கலைக்கழகங்களில் மாணவர் ஒன்றியங்களில் அதிகம் அரசியல் கட்சிகளின் செல்வாக்கு காணப்படுவதில்லை. எனினும் புரட்சி இயக்கங்களின் செல்வாக்கு வரலாறு தோறும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாடுகளில் அதிகம் பிணைந்துள்ளது. இவ்வரிசையிலேயே ஸ்தாபன வரலாற்றில் புரட்சி பாரம்பரியத்தை பகிரும் ஜே.வி.பி தலையீடும், தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாடுகளில் இன்றும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாட்டு அறிமுகம், டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாடு பற்றிய குறிப்புகளிற்கு முன் அவசியமானதாகும். இவ் அடையாளப்படுத்தலை முன்வைப்பதனூடாகவே டெல்லியில் கிடைக்கப்பெற்ற அனுபவத்தின் பெறுமதியை உணரக்கூடியதாக அமையும்.

எனது இளங்கலைமாணி பட்ட கற்கையின் போது யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் என்ற ஒன்றிய

செயற்பாடுகளில் ஓரளவு நிறைவான முன் அனுபம் உண்டு. இரண்டாம் வருடத்தில் வருடப்பிரதிநிதியாகவும், மூன்றாம் வருடத்தில் மாணவர் ஒன்றியத்தின் மீதான அதிருப்தி செயற்பாட்டாளராகவும், நான்காம் வருடத்தில் கலைப்பீட மாணவ ஒன்றியத்தின் பத்திராதிபராகவும் (நுனவைழச) மாணவ ஒன்றிய செயற்பாடுகளில் முன் அனுபவத்தை கொண்டுள்ளேன். எனினும் டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாடுகள் ஆரம்பம் முதல் அண்ணாந்து பார்க்கும் வியப்புகளையே ஏற்படுத்தியது. மலையும் மடுவமாகவே அதனை ஒப்பிட முடியும். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய வரலாற்றிலும் ஈழத்தமிழர்களின் அரசியல் செல்வாக்கு அதிகம் இணைக்கப்பட்டுள்ளது. முன்னரே குறிப்பிட்டது போன்று இலங்கை பல்கலைக்கழகங்களில் புரட்சிசார் இயக்கங்களே செல்வாக்கு செலுத்தக் கூடியது. அவ்வரிசையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசியம் சார் அரசியல் இயக்க செயற்பாடு வரலாற்றில் இணைந்துள்ளது. இவ் வரலாற்று தொடர்ச்சியில் எமது கால பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாட்டில், மூன்றாம் வருடத்தில் அதிருப்தி செயற்பாட்டாளர்களாக அரசியல் கைதிகளின் விடுதலை கோரி நாங்கள் சுயாதீனமாக மேற்கொண்ட ஒரு நாள் உண்ணாவிரத போராட்டமும் நான்காம் வருடத்தில் மாணவர் ஒன்றிய உறுப்பினராக தமிழ் பரப்பில் உள்ள அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து ஜனாதிபதித் தேர்தலை கையாள்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல்லகட்சி சந்திப்புக்களும் 13 அம்ச கோரிக்கையும் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு எமது அரசியல் செயற்பாடுகள் சாதாரண பொது மக்களின் அரசியல் பிரதிபலிப்புகளாகவே காணப்பட்டிருந்தது. எந்த ஒரு அரசியல் கட்சியின் பிரதிநிதியாகவோ உறுப்பினராகவோ மாணவர் ஒன்றிய செயற்பாடுகள் இடம்பெற அனுமதிப்பதில்லை. குறிப்பாக எமது கால யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர், ஒரு கட்சியின் மீது அதிக விசுவாசத்தை முன்னர் வெளிப்படுத்தியிருந்தார். இந்த பின்னணியில், அவர் தெரிவு செய்வதில் அதிக சச்சரவுகள் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




எனினும் டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாடுகள் முழுமையாக அரசியல் கட்சி ஆதிக்கம் கொண்டதாகவே அமைந்துள்ளது. மாறாக சுயாதீனமாக சுயேட்சையான செயற்பாடு வலுவிழந்ததாகவே காணப்படுகின்றது. அரசியல் கட்சி பின்புலம் கொண்ட மாணவர் குழுக்களே மாணவர் ஒன்றியத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது. பாரதிய

ஜனதா கட்சியின் மாணவர் கிளை யுடீஎீ எனப்படும். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மாணவர் கிளை ளுேருஜ என அழைக்கப்படும். அத்துடன் இடதுசாரி பாரம்பரியத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கட்சியின் மாணவர் கிளை ளுகுஜ என அழைக்கப்படும். இவர்கள் தங்களை சுயாதீன குழுவாக குறிப்பிடுவார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) தாராள கட்யின் மாணவர் கிளை யுஜளுயு என அழைக்கப்படும். இதனை தவிர சுயாதீன குழுக்களாக னுருளுயு அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த வகையில் டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தெரிவு குழுக்களின் பிரதிநிதிகளாகவே தெரிவுகள் தேர்தல் மூலமாக இடம்பெறும்.

டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தெரிவுசார் தேர்தல் இரண்டு வருடமும் வேறுபட்ட அனுபவங்கள் கிடைக்கப்பெற்றது. முதலாவது, நான் டெல்லிக்கு சென்று ஒரு வார கால பகுதிக்குள்ளையே செப்டம்பர்-22அன்று டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தேர்தல் நடைபெற்றிருந்தது. டெல்லி பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியம் ஆங்கில சுருக்கக் குறியீட்டில் னுருளுரு (டுசு) என அழைக்கப்படும். இந்த டுசு தெரிவுக்கான தேர்தலில் ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் காணப்படுகின்றார்கள். இங்கு ஆரம்பித்தது எனக்கான ஆச்சரியம். அது தொடர்ச்சியாக டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அல்லது அது சார் செயற்பாடுகளில் முழுக்க ஆச்சரியங்களையும் முன்அனுவம் இல்லாத திகைப்புகளையும் ஏற்படுத்தியது.

முதலாவது தேர்தல் காலப்பகுதியில், என் முதல் அனுபவம் ளுேருஜ சார்ந்து உருவாகியது. காரணம் நான் ஆரம்பத்தில் தங்கியிருந்த தமிழ்நாட்டு நண்பர்களின் விடுதி ஒரு வகையில் ளுேருஜ அணியின் பிரச்சார அலுவலகமாகவே தொழில்பட்டிருந்தது. டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தேர்தல் பிரச்சாரத்திற்காக குறித்த குழுக்களின் கட்சி பிரதிநிதிகளும் மாணவர்கள் அல்லாதவர்களும், குறித்த தேர்தல் காலப் பகுதியில், டெல்லியில் வந்து தங்கி பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவது உண்டு. அந்தவகையில் ளுேருஜ ஆதவாளர்கள் சிலர் எங்கள் விடுதியிலும் தங்கி இருந்தார்கள். எங்கள் தமிழ்நாட்டு நண்பர்களும் யுடீஎீ எதிர்ப்பு என்ற மனநிலையில் ளுேருஜ ஆதரித்திருந்தார்கள்.

டெல்லி பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தேர்தல்களில் இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களும் நேரடியாக தலையீடு செய்கின்றார்கள். ளுேருஜக்கு ஆதரவாக தமிழ்நாடு



விருதுநகர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் அவர்களை, டெல்லியில் உள்ள அவருடைய பாராளுமன்ற உறுப்பினர் விடுதியில் தமிழ்நாட்டு நண்பர்களுடன் சந்தித்தோம். நான் தமிழ்நாடு இல்லாத போதும், மொழியால் தமிழ் என்றதால் என்னையும் அழைத்து சென்றார்கள். இந்திய பாராளுமன்ற உறுப்பினரை சந்திக்க போறம் என்ற சிறுபிள்ளை புலுகம், விரிவுரைக்கு போகமா நியு டெல்லி மத்திய செயலக பிரதேசத்திற்கு, மெட்ரோல சென்றோம். இது என் முதல் மெட்ரோ பயணம். (எனது டெல்லி நாட்களில் மெட்ரோ நினைவுகளை தனிபதிவில் எதிர்காலத்தில் தொகுக்கிறேன்.) காலை 10.00 மணிக்கு சந்திப்பு என திட்டமிடப்பட்டது. 10.30க்கு எல்லாம் அங்கு போய்ட்டோம். ஆனா பாராளுமன்ற உறுப்பினர், மாலை 2.00 மணி போல தான் வந்திருந்தார். பாராளுமன்ற விவாதத்தில கலந்து கொண்டதால, எங்களுக்கு நேரம் ஒதுக்கியதை உதவியாளர் ஞாபகப்படுத்தவில்லையென கண்டித்தும் கொண்டார். என் மனதுக்குள் இதெல்லாம் நாங்க நிறைய தென்னிந்திய திரைப்படங்களில பார்த்திட்டோம்னு தான் தோனிச்சு.




காங்கிரஸ் பாராளுன்ற உறுப்பினரிடம் தமிழ்நாட்டின் நண்பர்கள் என்னை இலங்கையைச் சேர்ந்தவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். மாணிக்கம் தாகூர் அவர்கள், போருக்கு பின்னரான தன்னுடைய இலங்கை வருகையையும், அன்றைய ஜனாதிபதி உடனான சந்திப்புக தொடர்பிலும் சிறு அறிமுகத்தை வழங்கினார். உரையாடலுக்கு பின் நான் வெளியே வருகையில், அவ்விடுதியில் இருந்த ஏனைய காங்கிரஸ் அபிமானிகள் என்னிடம், “உங்களுக்கு எங்களை பிடிக்காது.” என்றவாறு கேள்வி எழுப்பினார்கள். அவர்களின் கோட்டைக்குள் நின்றுகொண்டு, “ஆம்” என்று சொல்வது சிரமம் தான். அதேநேரம் “இல்லை” என்று சொல்லி என் மனதையும் நோகடிக்க விரும்பவில்லை. ஆக காலத்தின் மீது பழியை போட்டு “அது இரு தரப்பின் காலத்தின் தவறு” என்றவாறு கூறிவிட்டு வந்தேன்.

இன்னொரு நாள் காங்கிரஸ் கட்சியின் மற்றொரு தமிழ்நாட்டு பாராளுமன்ற உறுப்பினரான வசந்த் அண்ட் கோ நிறுவனத்தின் தற்போதைய இயக்குனரும், தமிழ் திரைப்படங்கள் சிலவற்றில் நடித்துள்ள வசந்தகுமார் அவர்களை தமிழ்நாட்டு நண்பர்கள் சந்திக்க சென்றிருந்தார்கள். எனினும் கடந்த அனுபவம் நேர இழுத்தடிப்பால் வசந்தகுமார் உடனான சந்திப்பை நான் தவிர்த்து இருந்தேன். எனினும் சந்திப்பு முடிய வந்த நண்பர்கள் கூறிய விடயம் எனக்கு சிறு மன நெருடலை உருவாக்கியிருந்தது. டெல்லி வந்ததிலிருந்து நான் எங்கள்

உணவை ருசிக்க முடியவில்லை. வசந்தகுமார் உடனான சந்திப்பு டெல்லியில் உள்ள தமிழ்நாடு பவனிலேயே இடம்பெற்றது. இங்கு தமிழ்நாட்டு உணவுகள் உண்டு. வசந்தகுமார், தமிழ்நாட்டு மாணவர்கள் காங்கிரஸ் மாணவர் கிளையான ஞேருஜக்கு ஆதரவளிப்பதால், விருந்து வழங்கியிருந்தார்.
சந்திப்புக்கு சென்று இருந்த நண்பர்கள் அளவின்றி சாப்பிட்டதாக கூறினார்கள். ருசியான சாப்பாட்டில் இருந்த ஏக்கம் நெருடலை ஏற்படுத்தியது.

மாணவர் ஒன்றிய தேர்தலில் என் உறவு ஞேருஜ உடன் மட்டுப்படவில்லை. தமிழ்நாட்டு நண்பர்களின் பழக்கம் ஞேருஜ அறிமுகப்படுத்தியது. அதுபோல பல்கலைக்கழக நண்பர்களினால் பாரதிய ஜனதா கட்சியின் மாணவர் கிளையான யுடீஏ அறிமுகம் கிடைக்கப்பெற்றது. தேர்தல் காலப்பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகிலேயே யுடீஏ அலுவலகமும் இயங்கிக் கொண்டிருந்தது. அங்கு மூன்று நேரமும் உணவுகள் வழங்கப்பட்டது. என்னுடைய நண்பன் பிரதீப் என்பவன் ஆர்.எஸ்.எஸ் செயற்பாட்டாளன். அவன் யுடீஏ தேர்தல் அலுவலகத்திலேயே தங்கி இருந்தான். ஆதலால் மதிய நேரம் தன்னுடன் எங்களை அழைத்துச் சென்று யுடீஏ தேர்தல் அலுவலகத்தில் உணவு எடுத்து தருவான். நான், பிரதீப் மற்றும் சத்யபிரகாஷ் மூவரும் தேர்தல் காலப்பகுதியில் மதிய சாப்பாடு யுடீஏ அலுவலகத்திலேயே பெற்றுக் கொண்டோம். சிற்றுண்டிச்சாலை உணவுச் செலவை மீதப்படுத்திக் கொண்டோம்.

ஆக நான் டெல்லி சென்ற முதல் வாரத்திலேயே இடம் பெற்ற மாணவர் ஒன்றிய தேர்தலில் ஞேருஜ மற்றும் யுடீஏ ஆகியவற்றின் தேர்தலுக்கான செலவும், நேரடி அரசியல் தலையீடுகளும் புதியதொரு பிரமிப்பை உருவாக்கியது. பிரமிப்பிலிருந்து வெளி வருவதற்குள்ளேயே தேர்தல் முடிந்து, யுடீஏ போட்டியாளர்கள் தலைவர் மற்றும் பொருளாளர் பதவியில் வெற்றி பெற்றிருந்தார்கள். ஞேருஜ போட்டியாளர் செயலாளர் பதவியில் வெற்றியும் பெற்றிருந்தார். எனவே மாணவர் ஒன்றிய ஆதிக்கம் யுடீஏ வசம் சென்றது.

தேர்தலுக்கு முந்தைய நாட்கள் எல்லாம் வன்முறைகள் உச்சளவில் இடம் பெற்றது. எதிர் போட்டியாளர் மீது தாக்குதல்கள். உயர்ந்த



பட்சம் எதிர் போட்டியாளரின் வாகனம் தீக்கிரியாக்கப்பட்டது. இச்செய்திகளை குழுக்களில் பார்க்கும் போதும், நண்பர்கள் உரையாடும் போதும் இது இந்திய நாட்டுக்கான தேர்தலா? மாணவர் ஒன்றிய தேர்தலா? என்பது அதிகம் குழப்பங்களையே ஏற்படுத்தியது. என்னுடைய கடந்த கால யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயற்பாட்டு அனுபவங்களில் தேர்தல் காலத்தில் உயர்ந்தபட்சம் வார்த்தை போர்களே காணப்பட்டிருந்தது.

“நாங்கள் முன்னேற இடமுண்டு” இக்கூற்று மாணவர் ஒன்றிய தேர்தல் அனுபவத்திற்கு பொருத்தமில்லை. ஆனா மாணவர் குழுக்களின் செயற்பாட்டில் புரிந்து கொண்டேன்.

**என் புரிதலை தொடர்ந்து பார்ப்போம்...**

# நாட்டில் 5,500 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிப்பு

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் சமூக சுகாதார வைத்திய நிபுணர் ஹசரெலி பெர் னாண்டோ, மார்பகப் புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அதனால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனத் தெரிவித்தார். இலங்கையில் வருடாந்தம் 5,000 இற்கும் அதிகமான மார்பகப் புற்று நோய்கள் பதிவாகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார், உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது மார்பகப் புற்று நோயால் ஏற்படும் இறப்புகளின் சதவீதம் இலங்கை யில் அதிகரித்துள்ளது. இலங்கையில் சுமார் 5,500 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.





மம்முட்டி

# ஜஸ்பிரித் பும்ரா

## கடந்து வந்த கடினமான பாதை

**இந்திய கிரிக்கெட்டின் வரமாகவும் வைரமாகவும் பார்க்கப்படும் ஜஸ்பிரித் பும்ரா அவர்களின் சவால்கள் நிறைந்த வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி ஆராய்கிறது துமியின் இந்த மாத கட்டுரை**

1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் தேதி ஜஸ்பிரித் பும்ரா அகமதாபாத்தில் பிறந்தார். இவருடைய தந்தை ஜஸ்பீர் சிங் ஓட்டுனராக பணிபுரிந்த நிலையில் எளிமையான குடும்பத்திலேயே வாழ்ந்து வந்தார், இவருக்கு சிறுவயதிலிருந்தே கிரிக்கெட்டின் மீது அதிக அளவு ஆர்வம் இருந்தது, அதன் காரணமாக இளம் ஜஸ்ட் பிரிட்டின் முதல் கிரிக்கெட் முயற்சி சுற்றுப்புறத்தின் குறுகிய பாதைகளில் டென்னிஸ் பந்தில், கல்லில் கிரிக்கெட் விளையாடி வந்தார்.

தனது 5 வயதில் தந்தையை இழந்ததால் அவருடைய வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டது அவருடைய குடும்பம் வறுமைக்குச் சென்றது ஆனால் ஜஸ்பிரித் பும்ரா அவரது கிரிக்கெட் கனவை விடவில்லை அவருடைய தாயின் ஊக்குவிப்பால் கிரிக்கெட்டில் கவனம் செலுத்த தொடங்கினார், பும்ராவின் கிரிக்கெட் பயணம் தொடக்கத்தில் அகமதாபாத்தில் உள்ள உள்ளூர் கிளப்பானா கிரிக்கெட் கிளப்பில் லெதர் பந்துடன் விளையாடத் தொடங்கினார்.

பும்ராவின் பந்து வீச்சு பாணி ஒரு சிங் ஆசானால் வகைப்படுத்தப்பட்டது,



சிறுவயதிலிருந்தே அவரை தனித்துவமானவராக மாற உதவியது, குஜராத்தில் 19 வயதுக்குட்பட்ட அணியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக பும்ரா தேர்ந்தெடுக்கப்பட்டார் உள்நாட்டு கிரிக்கெட்டில் திருப்புமுனை ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து 2013 - 14 சீசனில் குஜராத் ரஞ்சி அணிக்காக பும்ரா விளையாடத் தொடங்கி அறிமுகமானார், உள்நாட்டு கிரிக்கெட் அவருடைய நிலையான செயல்பாடுகள் அவருக்கு இந்தியன் பிரீமியர் லீக் மும்பை இந்தியன்ஸ் அணியிடம் கிடைத்தது,

மேலும் பும்ரா ஐபிஎல்-லில் நுழைந்து அவருடைய கிரிக்கெட் பயணத்தை தொடங்கினார், அவர் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு விலைமதிப்பற்ற சொத்தாக மாறினார், அவருடைய திறமைகளை வைத்து அணியின் நம்பகத்தன்மை வாய்ந்த பந்து வீச்சாளராக பும்ரா இருந்தார், ஐபிஎல் இல் பும்ரா வின் சிறப்பான ஆட்டங்கள் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்தது

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய தேசிய அணியில் அறிமுகமானார் அப்போது நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 அறிமுகமானார். பும்ரா சர்வதேச கிரிக்கெட்டில் விரைவான வளர்ச்சி அடைந்த நிலையில் அவர் டெஸ்ட் கிரிக்கெட் உட்பட அனைத்து விதமான போட்டிகளிலும் இந்திய கிரிக்கெட் அணியில் உறுப்பினர்களில் ஒருவராக மாறினார். இவருடைய தனித்துவமான பந்துவீச்சு பாணி அவரை மற்ற பந்து வீச்சாளர்களிடம் இருந்து வேறுபடுத்தி காட்டியது பும்ராவின் வழக்கத்திற்கு மாறாக அணுகுமுறை அவருக்கு தனித்துவமான நன்மையை கொடுக்கும் வகையில் அமைந்தது.

இந்நிலையில் பும்ரா பிறந்த தருணம் குறித்தும் அவரது வாழ்க்கைப் பயணம் குறித்தும் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார் பும்ராவின் குடும்ப நண்பரும், பத்திரிகையாளருமான தீபல் திரவதி. இவர் பும்ரா பிறந்தபோது அவரது பக்கத்து வீட்டில் குடியிருந்தவர்.

அதில் "எனக்கு கிரிக்கெட் பற்றியெல்லாம் பெரிதாகத் தெரியாது. விராட் கோலி அனுஷ்காவின் கணவர் என்ற அளவில்தான்



என்னுடைய கிரிக்கெட் அறிவு. ஆனால், இந்தப் பதிவு விராட்டைப் பற்றியதல்ல, என்னுடைய ஹீரோ பும்ரா பற்றியது...” என்று நீண்ட பதிவு ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.

அதில், ”1993 டிசம்பரில் எனக்குப் பெரிதாக வருமானமில்லை. மாதம் 800 ரூபாய்தான் எனது சம்பளம். அப்போது எனது பக்கத்து வீட்டுக்காரரும், நண்பருமான தால்ஜித் வீட்டில்தான் நான் எப்போதும் இருப்பேன். எனக்கு அப்போது 22 - 23 வயதிருக்கும். தால்ஜித் (பும்ராவின் அம்மா) பிரசவத்திற்காக அகமதாபாத் மருத்துவமனையிலிருந்தார். அகமதாபாத்தில் இருக்கும் மருத்துவமனையில்தான் எனது அந்த டிசம்பர் மாதம் கழிந்தது. ஒல்லியாக பிங்க் நிறத்தில் பிறந்த குழந்தையாக இருந்த பும்ராவை நான்தான் என் நடுநடுங்கிய கைகளோடு முதன்முதலில் ஏந்தினேன். செவிலியர் ஆண் குழந்தை என்றார்” என்று பும்ராவை முதன்முதலில் கை குழந்தையாகக் கையில் ஏந்திய தருணம் குறித்துப் பதிவிட்டிருக்கிறார்

மேலும், பும்ராவின் வாழ்க்கைப் பயணம் குறித்துப் பேசியவர், ”பும்ரா பிறந்த இரண்டு மாதங்களில் என் வாழ்க்கையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. அப்போதைய குஜராத் முதல்வராக இருந்த சிமன்லால் திடீரெனக் காலமாக, அரசியல் சார்ந்த பிரிவில் ஊடகத்தில் எனக்குப் பதவி உயர்வு கிடைத்து என் வாழ்க்கை மாறியது. நான் கஷ்டப்பட்ட நேரத்தில் எனக்கு எல்லா உதவிகளும் செய்தது பும்ராவின் குடும்பம்தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பும்ராவிற்கு ஐந்து வயது இருக்கும்போதே அவரது தந்தை ஜாஸ்பிர் சிங் இறந்துவிட்டார். அவரது இறப்பிற்குப் பிறகு பும்ராவின் குடும்பம் வறுமைக்குத் தள்ளப்பட்டது. பும்ரா சிறுவயதில் ஆசையாகக் கேட்கும் பால் பாக்கெட்டை கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலை. பும்ராவின் அம்மா குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு நாளைக்கு 16 - 18 மணி நேரமெல்லாம் வேலை செய்தார். மிகுந்த கஷ்டத்தில் இருக்கும் பும்ராவின் அம்மாவை நான் அவ்வப்போது இறுக அணைத்து அறுதல் கூறித் தேற்றுவேன். அதே அறுதலை அவர் இன்றும் எனக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்.



அப்போது என்னிடம் கொஞ்சம் பணம் இருந்ததால் பும்ரா எட்டு வயதில் ஆசையாகக் கேட்ட ஜாக்கெட் ஒன்றை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தேன். அப்போது மகிழ்ச்சியிலிருந்த பும்ராவின் முகம் எனக்கு இப்போதும் பசுமையாக நினைவில் இருக்கிறது. பும்ராவின் படிப்புதான் குடும்ப சூழ்நிலையை மாற்றும் என்று எல்லோரும் நம்பினோம். ஆனால், அவனோ பிளாஸ்டிக் பந்தை வைத்து எப்போதும் பொறுப்பில்லாமல் விளையாடிக் கொண்டிருப்பான். இன்றும் அவன் அதே பந்தை வைத்துத்தான் விளையாடிக் கொண்டிருக்கிறான். அதுதான் அவனது வாழ்கையையே மாற்றியிருக்கிறது. இன்று அவன் மிகப்பெரிய லெஜெண்டாகிவிட்டான்.

டி20 உலகக் கோப்பையில் அவனது பந்துவீச்சு அவ்வளவு அற்புதமாக இருந்தது. இந்திய அணியின் வெற்றிக்கு அவனது அந்தப் பந்துவீச்சு மிக முக்கியமானதாக இருந்தது. இந்தியாவிற்குப் பெருமை சேர்த்துள்ளது அவனது பந்து வீச்சு. பும்ராவை நினைத்து நான் மிகுந்த பெருமை கொள்கிறேன். அவன்




இன்றும் மாறாமல் அதே பணிவுடன் அப்படியே இருக்கிறான். அவனிடம் நான் நிறைய கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நீண்ட பதிவை நான் பதிவிடுவதற்குக் காரணம், “எவ்வளவு கஷ்டம் என்றாலும் கடவுள் நம்மை என்றும் கைவிடமாட்டார். நம்பிக்கையை என்றும் இழந்துவிடக் கூடாது“ என்பதை பும்ராவின் வாழ்வு எனக்குக் கற்றுக் கொடுத்திருப்பதைச் சொல்லத்தான்.

பும்ராவைக் கைக்குழந்தையாக என் கைகளில் ஏந்தியபோது நான் பார்த்த அவனது பிரகாசமான அந்தப் பிஞ்சு முகம் என் வாழ்க்கைக்கு அன்று ஒளி தந்தது. எனக்குக் கஷ்டம் வரும்போதெல்லாம் நான் அந்த முகத்தை மனதில் நினைத்துக்கொள்வேன். இப்படிப்பட்ட குழந்தையைத் தனி ஆளாக நின்று வளர்த்த பும்ராவின் அம்மா தல்ஜித்தை எண்ணி வியக்கிறேன்” என்று மிகுந்த நெகிழ்ச்சியுடன் பும்ரா பற்றிப் பதிவிட்டுள்ளார் தீபல் திரவதி.

இந்திய கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களை மட்டுமே நாயகர்களாக கொண்டாடிய காலத்தில் தன் பந்துவீச்சு திறனால் பல போட்டிகளின் முடிவை இந்திய அணி பக்கம் திருப்பி இந்திய ரசிகர்கள் மனதில் வெற்றி நாயகனாக, இந்திய அணியின் அரும்பெரும் சொத்தாக திகழும் ஜஸ்பிரித் பும்ரா ஏழ்மையில் வளரும் குழந்தைகளுக்கு உதாரண புருஷனாகவும் இருக்கிறார்.